

தென்காசி மாவட்டம் குற்றாலம் குற்றாலநாத சுவாமி கோவிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு பணி மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர்,தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், அறங்காவலர் குழு தலைவர் சக்தி முருகன், ஸ்ரீதர், வீரபாண்டியன், ராம லட்சுமி பெருமாள், இணை ஆணையர் அன்புமணி,குற்றாலம் குட்டி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா,உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 500 கிராம

# ஊராட்சிகளில் 7 லட்சம் தெரு விளக்குகள் புதிதாக பொருத்தப்படும்!

## ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி,ஜூலை 9-

தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 500 கிராம ஊராட்சிகளில் 7லட்சம் தெரு விளக்குகள் புதிதாக பொருத்தப்படும் என ஆத்தூர் தொகுதி கே.புதுக்கோட்டையில் நடைபெற்ற சமுதாயக்கூட அடிக்கல்நாட்டு விழாவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் மற்றும் அருந்ததியர் சமுதாய மக்கள் பயன் பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதியில் சமுதாயக்கூடங்கள் கட்டி கொடுக்கப்பட்டு வருகின்றன குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தனி கவனம் செலுத்தி தேவைப்படும் இடங்களில் ஒரே ஊராட்சியில் இரண்டு மூன்று சமுதாயக் கூடங்களை கட்டிக்கொடுத்து வருவதால் பொது மக்கள் மத்தியில் அவருக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது. கே. புதுக்கோட்டையில் உள்ள ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியில் சமுதாயக்கூடம் அமைப்பதற்கான அடிக்கல்நாட்டு விழாவில் நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் கோட்டாட்சியர் சக்திவேல், தலைமை தாங்கினார். ஊராட்சிகளின் உதவி இயக்குநர் சீனிவாச பெருமாள் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா. தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் மணி, மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் சுமதி கணேசன்,. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மன்மதன் என்ற காமாட்சியப்பன் வரவேற்றார்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியில் மக்கள் குலவை யிட்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். கே.புதுக்கோட்டை கிராம மக்கள் சார்பாக முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் நாகலெட்சுமி ரமேஷ் பிரம்மாண்டமான மாலை அணிவித்து வரவேற்பு அளித்தார். அதன்பின்னர் ரூ.50 லட்சம் மதிப்பில் கட்டப்படும் சமுதாயக்கூட அடிக்கல்நாட்டு விழாவில் கலந்து கொண்டு பொது மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி இந்தியாவிலேயே ஒரு முதல்வர் பொது மக்களை வீடு வீடாக தேடி சென்று குறைகளை கேட்கும் ஒரே மாநிலம் தமிழகம். ஒரே முதல்வர் மு.க.ஸ்டாலின் என்ற போது பொதுமக்கள் கை தட்டி ஆரவாரம் செய்தனர். அதன்பின்னர்பொது மக்கள் மத்தியில் பேசிய ஐ.பெரியசாமி மகளிர் உரிமைத்தொகை விடுபட்ட மகளிருக்கு உரிமைத் தொகை கிடைக்கும் வகையில் வருகின்ற 15ம் தேதி உங்களுடன் முதல்வர் என்ற முகாம் நடைபெற உள்ளது.

நீங்கள் இந்த முகாமை தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் கொடுக்கும் அத்தனைக்கும் உடனடியாக தீர்வு காணப்படும். இது தவிர உங்கள் மனுக்கள் அனைத்தும் தமிழக முதல்வரின் பார்வைக்கு செல்ல உள்ளது. 100க்கு 99 சதவீதம் உங்களுக்கு உரிமைத் தொகை உறுதியாக கிடைக்கும். இதை நீங்கள் தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். ஆத்தூர் தொகுதியில் கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் 2 ஆயிரம் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு தற்போது 2 ஆயிரத்து 500 வீடுகளுக்கு மனுக்கள் தரப்பட்டுள்ளது.

இது தவிர பழைய வீடுகளை பராமரிக்கவும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு 100 நாள் வேலைதிட்டத்தை முடக்கி கிராமப்புற ஏழைகளை வறுமையில் தள்ள நினைத்தாலும் தமிழக அரசு விடாமல் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்காமல் நடத்தி வருகிறது. அதற்கான நிதியையும் ஒதுக்கி உள்ளது. நீங்கள் 100 நாள் வேலைத்திட்டம் குறித்து கவலைப்பட வேண்டாம் என்றார். வீடு இல்லாமல் இருக்கும் ஏழைகளுக்கு வீடுகள் வழங்குவதுடன் அவர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க தமிழக அரசு தயாராக உள்ளது என்றார்.

விழாவில் வட்டார வளர்ச்சி அலுவலர் மலரவன், அமைச்சரின் சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், தி.மு.க. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரெட்டியார் சத்திரம் ப.ராஜேஸ்பெருமாள், மாவட்ட பொறியாளர் அணியை சேர்ந்த செந்தில் குமரன், மகேந்திரன், மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பழனி தண்டாயுத பாணி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் கொம்பன் என்ற பாலசுப்ரமணி, ஒன்றிய பொறியாளர் அணியை சேர்ந்த என். மனோகரன், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஷ், மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் கதிரையன் குளம் பாலன்,

முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் கோனூர் திருப்பதி, காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் அம்மாபட்டி ரவி, கே.புதுக்கோட்டை பன்னீர்செல்வம், கோனூர் வெள்ளைத்தாய் தங்க பாண்டியன், கரிசல்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பால்ராஜ், கொத்தப்புள்ளி ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரி அன்பரசு, துணைத் தலைவர் எம்.வி.ரெங்கசாமி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் தாயமுத்து, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் கொம்பன் என்ற பாலசுப்ரமணி, உட்பட தி.மு.க. நிர்வாகிகள், ஊராட்சி மன்ற செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக ஊராட்சி செயலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் கே.இ. சம்பந்தம்

**ஜூலை 9 (1993)**



நீதிக்கட்சிக் காலம் தொட்டு திராவிட இயக்க பற்றாளராக விளங்கியவர்.

வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும், இராயபுரம் பகுதி அவைத் தலைவராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகத்திற்கு சொந்தமாக ஒரு அலுவலக கட்டிடம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பியபோது, இராயபுரத்தில் ஒரு கட்டிடத்தை முன்னின்று விலைபேசி கழகத்திற்கு வாங்கிட துணைபுரிந்தவர். அக்கட்டிடம் பின்னர் ‘அறிவகம்’ என்று அண்ணாவால் பெயர் சூட்டப்பட்டு தலைமைக் கழகமாக இயங்கியது

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று ஏழு முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### வஞ்சகப் பாதையில் ஒன்றியம்!

# வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு!

தமிழ்நாட்டில் முதலமைச்சர் கழக தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு இந்த 4 ஆண்டுகளில் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றினால் எட்டப்பட்ட பலன்கள் என்னவென்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றன.



அந்தவகையில் 2024-25 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, 9.69% என அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட 8% வளர்ச்சி, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆய்வறிக்கையில் உத்தேசிக்கப்பட்ட 9.3% வளர்ச்சி ஆகியவற்றை விடவும் அதிகமான வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு எட்டியிராத அதிகபட்ச வளர்ச்சி என்பது மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை இந்த ஆண்டு பதிவு செய்திருப்பது தமிழ்நாடுதான். குறிப்பாக சேவைகள் துறை 12.7%, இரண்டாம் நிலை துறைகள் 9% வளர்ச்சி கண்டுள்ளன. ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் குஜராத், பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்கள், தங்கள் மாநிலங்களின் 2024-25-ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதத் தரவுகளையே இன்னும் பதிவு செய்யவில்லை.

இந்த வளர்ச்சியை தமிழ்நாடு எந்த சூழலுக்கு மத்தியில் எட்டியுள்ளது என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. வரிப்பகிர்வில் ஒன்றிய அரசு இழைத்த அநீதியால் 4% வருவாயை இழந்திருக்கிறது தமிழ்நாடு. ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பங்கெடுக்கும் திட்டங்களில் ஒன்றிய அரசின் பங்கை தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருகிறது பாஜக அரசு. உதவி மானியங்களில் தமிழ்நாடு 2.09% வீழ்ச்சியை கண்டிருக்கிறது. ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகை 3 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டு விட்டது. புயல் நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ள 37,000 கோடி ரூபாயில் இதுவரை ஒரு ரூபாய் கூட விடுவிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டின் பெயர் கூட அதில் இடம் பெறவில்லை. மற்ற பெரிய திட்டங்கள் எதையும் தமிழ்நாடு மோடி ஆட்சியிடம் இருந்து பெறவில்லை. மதுரை எய்ம்ஸ் மட்டும் ஒற்றைச் செங்கல்லை நட்டு வைத்ததுடன் நிற்கிறது. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதியில் 4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவைத்தொகை உள்ளது. கல்வி திட்டத்திற்கான நிதியில் 2,152 கோடி ரூபாய் நிலுவைத்தொகை உள்ளது.

இதைத்தாண்டி தமிழ்நாடு அல்லது மற்ற எதிர்க்கட்சி மாநிலங்கள் பெரும் முயற்சி எடுத்து ஈர்க்கும் முதலீடுகளையும் குஜராத், உத்தரப் பிரதேசத்திற்கு திசைதிருப்பும் சூழ்ச்சிகளும் கடந்த சில ஆண்டுகளில் நடந்திருக்கின்றன. ஒன்றிய அரசின் இத்தனை வஞ்சனைகளையும் கடந்து தமிழ்நாடு இந்த பெரும் வளர்ச்சியை கண்டிருக்கிறது என்பதுதான் குறிப்பிடத்தக்க சாதனை.

- **இந்தியாவின் பொருளாதாரத்தில் தமிழ்நாடு 9% பங்கை வகிக்கிறது.**
- **இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.**
- **ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24% இருக்கும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19% உயர்ந்துள்ளது.**
- **இந்திய அளவில் பணவீக்கமானது 6.65% இருக்கும்போது, தமிழ்நாட்டில் அது 5.97% குறைந்து உள்ளது.**
- **ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.**
- **மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது.**
- **தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14-வது இடத்தில் இருந்த தமிழ்நாடு 3-வது இடத்துக்கு திராவிட மாடல் ஆட்சியில் முன்னேறி உள்ளது.**
- **கல்வியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.**
- **புத்தாக்கத் தொழில்கள் வரிசையில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.**
- **இளைஞர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், விளிம்புநிலை மக்கள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.**

**இந்த இந்த சாதனைகள் மட்டுமா என்றால் நிச்சயமாக இல்லை.**

**நான் முதல்வன் திட்டம் மூலம் இந்த ஆண்டு இதுவரை 85000 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டது.**

**தொடங்கப்பட்ட ஒரே வருடத்தில் அதாவது 2022-2023-ம் கல்வியாண்டில் 13.14 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பல்வேறு திறன்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 1,48,169 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு பணிக்கு சேர்ந்துள்ளனர்.**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் பயனடைகின்றனர்.**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 31,000 அரசுப் பள்ளிகளில் 17 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.**

**புதுமைப் பெண் திட்டத்தில் 2,72,216 கல்லூரி மாணவிகள் மாதந்தோறும் பயன்பெறுகின்றனர்.**

**விடியல் பயணம் திட்டத்தில் மகளிர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள் 445 கோடி முறை பயணம் செய்து மாதந்தோறும் ரூ.888 சேமிக்கின்றனர்.**

**மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 2 கோடியே 10 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.**

**‘இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டத்தில் 2 இலட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.**

**விவசாயிகளுக்கு 2 இலட்சம் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டு கூடுதலாக 2,99,384 ஏக்கரில் பயிர் சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**“நான் முதல்வன் திட்டத்தில் பொறியியல், கலை, அறிவியல் கல்லூரி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்ற 28 இலட்சம் மாணவர்களுக்குத் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.**

**ரூ.4,818 கோடி கூட்டுறவு நகைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு 13 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.**

**மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1,500-லிருந்து ரூ.2,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**

**4 ஆண்டுகளில் 3226 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**ரூ.5,996.53 கோடி மதிப்பிலான 6,800.68 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.**

**5000 ஆண்டு தமிழர் வரலாற்றை உயர்த்திப் பிடிக்கும் கீழடி அகழாய்வுப் பணியில் கிடைத்துள்ள பொருள்களைப் பாதுகாக்கும் அருங்காட்சியகம் நிறுவப்பட்டுள்ளது.**

**அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் – ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் மேம்படுத்தவும் ரூ.200 கோடியில் 1,769 பணிகளை நிறைவேற்றியுள்ளது.**

**ரூ.2,358.53 கோடி மதிப்பீட்டில் 44 அரசு பல்வகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும் (Polytechnic); ரூ.2,877 கோடி மதிப்பீட்டில் 71 அரசு தொழிற் பயிற்சி நிறுவனங்களும் (ITI) தொழில் 4.0 அளவிற்குத் தரம் உயர்த்தப்படுகின்றன.**

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மூலம் 970 பயனாளிகளுக்கு ரூ.131.91 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.**

**7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் 28,601 அரசுப் பள்ளி மாணவ மாணவியர் தொழில் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.**

**உணவு தானிய உற்பத்தியில் சாதனை!**

**கடந்த 4 ஆண்டுகளில் 458 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி!**

**2020-21ல் ஹெக்டேருக்கு 2,235 கிலோ இருந்த உற்பத்தி, 2024-25ல் 2,871 கிலோ ஆக உயர்வு!**

### விவசாயிகளுக்கு ஆதரவு!

**81 இலட்சம் விவசாயிகளுக்கு கூட்டுறவு மூலம் 62,352 கோடி ரூபாய் பயிர்க்கடன் & கால்நடை கடன்!**

**26 இலட்சம் விவசாயிகள் சிறப்பு கால்நடை சுகாதார முகாம்களால் பயன்பெற்றனர்!**

### இலவச மின்சாரம்!

**2 இலட்சம் இலவச வேளாண் மின் இணைப்புகள் அறிவிப்பு!**

**இதுவரை 1.84 இலட்சம் இணைப்புகள் (2,184 கோடி ரூபாய் செலவு) வழங்கப்பட்டன!**

**இலவச மின்சாரத்திற்கு 26,223 கோடி ரூபாய் செலவு!**

### விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை!

**சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 105 ரூபாய், பிற ரகங்களுக்கு 130 ரூபாய் கூடுதல் விலை!**

**கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு 3,151 ரூபாய் ஆதார விலையுடன் 349 ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை!**

### அகில இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணி!

**சிறுதானியங்கள், கேழ்வரகு, எள், துவரையில் முதலிடம்!**

**மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள், கரும்பில் இரண்டாம் இடம்!**

**குறுதானியங்கள், நிலக்கடலையில் மூன்றாம் இடம்!**

**கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி!**

**12,525 கிராம ஊராட்சிகளில் வளர்ச்சி திட்டங்கள்!**

**மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் 20 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்றனர்!**

### விவசாயிகளுக்கு நிவாரணம்!

**21 இலட்சம் விவசாயிகளுக்கு 1,630 கோடி ரூபாய் நிவாரணம்!**

**32 இலட்சம் விவசாயிகளுக்கு 5,720 கோடி ரூபாய் பயிர்க்காப்பீட்டு இழப்பீடு!**

### சிறப்பு திட்டங்கள்!

**மதுரை மல்லிகை, பலா, முருங்கை, சிறுதானிய இயக்கம்!**

**பனை மேம்பாடு, தென்னை வேர் வாடல் நோய் மீட்பு, கறிவேப்பிலை தொகுப்பு!**

### உழவர் சந்தைகள்!

**125 உழவர் சந்தைகள் புதுப்பிப்பு, 14 புதிய சந்தைகள் உருவாக்கம்!**

### மஞ்சள் ஆராய்ச்சி மையம்!

**25,000 ஏக்கர் கூடுதல் தோட்டக்கலை பயிர் சாகுபடி!**

**அத்திக்கடவு-அவினாசி திட்டத்தால் 1,045 ஏரிகள் & குளங்கள் வளம் பெற்றன!**

### பவானி ஆற்றில் 8 தடுப்பணைகள்!

**கீழ்பவானி கால்வாய் 514 கோடி ரூபாயில் புனரமைப்பு!**

**8,579 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு!**

**உத்தமத் தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு திருவுருவச்சிலை & அரங்கம்!**

**முதியோர் ஓய்வூதியம் 1,000 ரூபாயில் இருந்து 1,200 ரூபாயாக உயர்வு (6.61 கோடி ரூபாய் வழங்கப்பட்டது)!**



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

### திறன் மேம்பாடு & வேலைவாய்ப்பு:

- 29 அரசு பொறியியல் கல்லூரிகளில் ரூ.30.17 கோடியில் திறன் மையங்கள்!
- ‘நான் முதல்வன்’ திட்டம்:
- 41.39 லட்சம் மாணவர்கள் & 1.01 லட்சம் விரிவுரையாளர்களுக்கு பயிற்சி.
- 1.02 லட்சம் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் வேலை.
- உயர்வுக்கு படி: 77,752 மாணவர்கள் உயர்கல்வியில் சேர்க்கை.
- கல்லூரி கனவு 24: 1.87 லட்சம் மாணவர்கள் பயனடைந்தனர் (நடப்பு ஆண்டு: 81,149).
- இந்தியா திறன் 24: 6 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலம், 17 சிறப்பு பதக்கங்கள்!
- குடிமைப் பணி தேர்வு:
- 2022: 36 பேர் | 2023: 47 பேர் | 2024: 57 பேர் (50 பேர் ‘நான் முதல்வன்’ பயிற்சி).

**மக்களுடன் முதல்வர்:**

- 14.45 லட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.
- 86,217 புறம்போக்கு & 1.36 லட்சம் சென்னை பட்டாக்கள்.

**சுய சான்றிதழ் திட்டம்:**

- 15,015 மனைப் பிரிவு & 5,496 கட்டட வரைபட அனுமதிகள்.
- 2,500 ச.அடி மனையில் 3,500 ச.அடி கட்டட அனுமதி எளிதாக வழங்குகிறது !

**மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைவரின் வளர்ச்சியிலும் அக்கறைக் காட்டி சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு!**

**இந்தியாவின் சிறந்த மாடல் திராவிட மாடல்**

கல்வியாக இருக்கட்டும், தனிநபர் வருமானமாக இருக்கட்டும், ஊட்டச்சத்து குறைபாடாக இருக்கட்டும், வறுமை கோட்டிற்கு கீழே இருக்கும் மக்களின் எண்ணிக்கையாக இருக்கட்டும் எந்த ஒரு அளவுகோலிலும் தெற்கிற்கும் வடக்கிற்கும் பாரதூர வேறுபாடு இருக்கிறது. கல்வியின் மூலம் சர்வதேச நிறுவனங்களில் பணிபுரியும் வகையில் சிறப்பான மாணவர்களை தமிழ்நாடு உருவாக்கி இருக்கிறது இந்தியாவுக்கு என்று ஒரு மாடல் இருக்க முடியும் என்றால் அது தமிழ்நாடு மாடலாக மட்டுமே இருக்க முடியும்.

- ‘தி வயர்’ இணையதள நேர்காணலில் கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசியல் சமூகவியல் பற்றி வகுப்பெடுக்கும் *பேராசிரியர் கிறிஸ்டோப் ஜெபர்லோ கருத்து.